**செய்தி வெளியீடு எண்:414** **நாள்: 30.06.2017**

## தேர்வணையத்தின் மறுப்பறிக்கை

28.06.2017 நாளிட்ட மாலைமலர் / 29.06.2017 நாளிட்ட தி இந்து, தினத்தந்தி நாளிதழ்களின் வாயிலாகவும் மற்றும் தொலைக்கட்சிகள் வாயிலாகவும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய குரூப்-1 தேர்வில் முறைகேடுகள் நடந்திருப்பதாகவும் குரூப்-1 முதன்மைத் தேர்வு முடிவுகளை ரத்து செய்ய வேண்டும் என்றும் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர்.இராமதாஸ் தெரிவித்துள்ளார். இச்செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பான உள்நோக்கம் கொண்ட செய்தியாகும்.

இந்த அவதூறு செய்தி தொடர்பாக கீழ்க்கண்ட விவரம் தெரிவிக்கப்படுகிறது. குரூப்-1 முதல்நிலைத் தேர்வு (Preliminary Examination) 08.11.2015 அன்று நடைபெற்றது. அத்தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 1,17,696. அத்தேர்வில் தேர்ச்சி பெற்று முதன்மை தேர்விற்கு (Main Written Examination) அனுமதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 3,816 ஆகும். கடந்த 29.07.2016, 30.07.2016 மற்றும் 31.07.2016 ஆகிய தேதிகளில் மேற்படி குரூப்-1 பதவிகளுக்கன முதன்மைத் தேர்வு சென்னை மையத்தில் நடத்தப்பட்டது. இத்தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 2,926. தேர்வின் போது ஒவ்வொரு தேர்வு மையத்திலும் வினாத்தாட்கள், விடைத்தாட்கள் தேர்வர்களுக்கு வழங்குவது,

தேர்வர்கள் தேர்வு எழுதுவது மற்றும் தேர்வு முடிந்த பின்னர் விடைத்தாட்களை கட்டுகளாகக் கட்டி பாதுகாப்பாக முத்திரையிடப்பட்டு ஒப்படைக்கப்படுதல் வரை தேர்வு பணிக்காக அமர்த்தப்பட்டவர்கள் முன்னிலையில் வீடியோ கேமராவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்காக ஒவ்வொரு மையத்திலும் காவலர்கள் பணியமர்த்தப்பட்டனர்.

தேர்வாணைய அலுவலகத்தில் அவ்விடைத்தாட்களின் எண்ணிக்கை சரிபார்க்கப்பட்டு பின்னர் விடைத்தாட்கள் கலைக்கப்பட்டு (Shuffling) ஒவ்வொரு விடைத்தாட்களிலும் அதில் தேர்வர்களால் எழுதப்பட்டுள்ள பதிவெண்கள் (Register Number) மறைக்கப்பட்டு பதிலெண்கள் (“Dummy Number”) இடப்படுகின்றன. பின்னர் அவ்விடைத்தாட்களை திருத்தம் செய்யும் பொருட்டு வேறொரு பிரிவிற்கு மாற்றப்படுகிறது. விடைத்தாட்களில் பதிலெண் இடும் பணியும், விடைத்தாள் திருத்துவது தொடர்பான நடவடிக்கை எடுக்கும் பணியும் வெவ்வேறு பிரிவுகளால் செய்யப்படுகின்றன. தேர்வு முடிந்தவுடன் விடைத்தாள்கள் பெறப்படுவது, பதிலெண் இடுவது (“Dummy Number”) விடைத்தாள்கள் மதிப்பீடு செய்வது தொடர்பான பணிகள், எழுத்துத் தேர்வு முடிவுகள் வெளியிடுவதுவரை அனைத்து பணிகளும் தேர்வுகட்டுப்பாட்டு அலுவலரின் கீழ் உள்ள பிரிவுகளால் செய்யப்படுகின்றன. மேலும், எந்த விடைத்தாள் யாருடையது என்பது மிகவும் இரகசியமாக வைத்துக் கொள்ளப்படுகிறது. விடைத்தாள்கள் திருத்தும்

மதிப்பீட்டாளர்களுக்கோ மற்றும் தேர்வாணையத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கோ யாருடைய விடைத்தாள் எது என்பது தெரியாது. இந்நிலையில் விடைத்தாட்கள் மாற்றப்பட்டு முறைகேடு நடைபெற்றதாக வெளியிடப்பட்டுள்ள செய்தி முற்றிலும் தவறானது; உள் நோக்கம் கொண்டது. அனுபவமிக்க மதிப்பீட்டாளர்களைக் கொண்டு ஒவ்வொரு விடைத்தாளும் வெவ்வேறு மதிப்பீட்டாளர்களைக் கொண்டு இருமுறை மதிப்பீடு செய்யப்படுகின்றன. தேவைப்பட்டால் மூன்றாவது மதிப்பீடும் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு நிலையிலும், விடைத்தாட்கள் திருத்தும் பணி மிகவும் நம்பகத்தன்மையுடனும், பாதுகாப்புடனும், இரகசியத்துடனும், சந்தேகத்திற்கு இடமின்றியும் எவ்விதிமீறலுக்கும் இடம் கொடாமல் நடைபெறுகிறது. பின்பு, தகுதி மற்றும் இடஒதுக்கீடு அடிப்படையில் தேர்வு முடிவுகள் வெளியிடப்படுகின்றன.

தேர்வாணையத் தலைவர் இரண்டு மாதங்கள் விடுப்பில் செல்வது சம்பந்தமான முடிவு அவரால் பல மாதங்களுக்கு முன்பே எடுக்கப்பட்டது. அவர் விடுப்பில் செல்வதற்கும் குரூப்-1 தேர்வு முடிவுகள் வெளியிடுவதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இரண்டு மாதங்கள் தேர்வாணைய உறுப்பினர்கள் இல்லாத அசாதாரண சூழ்நிலையிலும், தேர்வுகட்டுப்பாட்டு அலுவலர் பயிற்சிக்கு சென்றிருந்ததாலும் குரூப்-1 முடிவுகள் வெளியிடுவதில் ஏற்கனவே காலதாமதம் இருந்தது. தேர்வாணையத் தலைவர்

விடுப்பில் சென்றாலும், தேர்வுகட்டுப்பாட்டு அலுவலரின் கட்டுப்பாட்டில் உள்ள மந்தணப்பிரிவால் வைக்கப்பட்ட எழுத்து தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பதிவெண் பட்டியல் பொறுப்பு தேர்வாணையத் தலைவர் மற்றும் தேர்வாணையக் குழுமத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு குரூப்-1 தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

எனவே, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர்.இராமதாஸ் அவர்கள் தொலைக்காட்சிகளில் மற்றும் பத்திரிக்கைகளில் தெரிவித்துள்ள செய்தி தவறான நோக்கத்தோடு அவதூறு பரப்பும் வகையில் கொடுக்கப்பட்டுள்ளது. வேலையற்ற இளைஞர்களுக்கு தேர்வாணையம் நம்பிக்கையூட்டும் நிறுவனமாக விளங்குகிறது. இத்தகைய ஆதாரமற்ற செய்திகள் இளைஞர்களின், குறிப்பாக தேர்வர்களின் மனதில் பாதிப்பை ஏற்படுத்துவதோடு, அவர்கள் மத்தியில் மிகுந்த மன உளைச்சலையும், விரக்தியையும் ஏற்படுத்தி அவர்களை தவறான பாதைக்கு அழைத்துச் செல்ல வழிவகுக்கும்.

தேர்வாணையம் நவீன முறையிலும் மற்றும் வெளிப்படையான முறையிலும் தேர்வுகளை நடத்துவதில் தேசிய அளவில் ஒரு சிறந்த நிறுவனமாக கருதப்படுகிறது. இதுபோன்ற ஆதாரமற்ற செய்திகளால் தேர்வாணைத்தின் நற்பெயருக்குக் குந்தகம் விளைவிப்பதாக இருக்கிறது.

அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர்களாக தற்போது நியமிக்கப்பட்டவர்கள் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின்

வழிகாட்டுதலின்படியும் தகுதியின் அடிப்படையில்தான் தமிழக அரசால் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, மாண்புமிகு உயர் நீதிமன்றத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பதவி அளிக்கப்பட்டுள்ளனர் என்று பாமக நிறுவனர் டாக்டர்.இராமதாஸ் தெரிவித்திருப்பது ஏற்புடையதல்ல; உண்மைக்கு மாறான தகவலாகும். பொதுவாக தேர்வர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் குறைகள் மற்றும் மனுக்கள் மீது தேர்வாணையத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

தேர்வாணையம் அனைத்துத் தேர்வுகளையும் சிறப்பான முறையில் நடத்துகின்றது. தவறான செய்திகளால், சிறப்பாகவும், நேர்மையாகவும் செயல்படும் தேர்வாணைய அலுவலர்கள் மத்தியில் மன அழுத்தத்தையும், விரக்தியையும் ஏற்படுத்தி, அவர்களுடைய முயற்சிக்கு தடைக்கல்லாக அமையும். மேலும் தேர்வாணையம் தொடர்பாக, பாமக நிறுவனர் டாக்டர்.இராமதாஸ் வெளியிட்டுள்ள அடிப்படை ஆதாரமற்ற மற்றும் உண்மைக்குப் புறம்பான அவதூறான செய்திகள் தேர்வாணையத்தின் பெயருக்குக் களங்கம் விளைவிக்கக்கூடிய வகையில் உள்ளது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**